பொள்ளாச்சி மார்க்கெட் நிலவரம்
உழவர் சந்தை

கத்தரி(கிலோ)	ரூ.40	பச்சைமிளகாய்	ரூ.70
சின்னவெங்காயம்	ரூ.60	பீன்ஸ்	ரூ.140
வெண்டை	ரூ50	சாம்பல்பூசணி	ரூ.30
பெரிய வெங்காயம்	ரூ.30	உருளைக்கிழங்கு	ரூ.40
தக்காளி(நாட்டுரகம்)	ரூ.40	சர்க்கரைபூசணி	ரூ.30
தேங்காய்	ரூ.60	காலிபிளவர்	ரூ.50
முருங்கக்காய்	ரூ.60	**பழவகைகள் (கிலோ)**	
அவரை	ரூ.125	பூவன்	ரூ.40
சேனை	ரூ.50	செவ்வாழை	ரூ.65
புடலை	ரூ.40	தேன்வாழை	ரூ.65
மரவள்ளி	ரூ.40	சப்போட்டா	ரூ.60
பீர்க்கங்காய்	ரூ.60	மாம்பழம்	ரூ.60
கேரட்	ரூ.70	பப்பாளி	ரூ.45
சுரைக்காய்	ரூ.30	**பூக்கள் (கிலோ)**	
பீட்ரூட்	ரூ.65	முல்லை	ரூ.500
பாகற்காய்	ரூ.60	சம்மங்கி	ரூ200
வெ.முள்ளங்கி	ரூ.30	அரளி	ரூ.180
முட்டைகோஸ்	ரூ.30	சில்லிரோஸ்	ரூ.150
கொத்தவரை	ரூ.40	செண்டுமல்லி	ரூ.180
இஞ்சி(புதியது)	ரூ.140	கோழிக்கொண்டை	ரூ.100

அணைகளின் நீர்மட்டம்



அணை	மொத்த கொள்ளளவு	நீர்மட்டம் அடி	நீர் வரத்து கன அடி	வெளியேற்றம் கனஅடி
சோலையார்	160 அடி	13.65	40	10
பரம்பிக்குளம்	72 அடி	171	1162	1210
ஆழியார்	120 அடி	29.44	171	1162
திருமூர்த்தி	60 அடி	63.80	454	99
அமராவதி	90 அடி	49.25	786	255

மதுக்கடைகளில் போலீசார் திடீர் சோதனை

பெ.நா.பாளையம், மே 19: தமிழக அரசு விதித்த கட்டுப்பாடுகளை தொடர்ந்து, கோவை பெரியநாயக்கன்பாளையம் பகுதியில் மதுக்கடைகளில் போலீசார் திடீர் சோதனை நடத்தினர். கோவையை அடுத்துள்ள பெரியநாயக்கன்பாளையம் பகுதியில் மதுக்கடைகளில் இன்ஸ்பெக்டர் ராஜேஷ் கண்ணன் தலைமையில் நேற்று முன்தினம் இரவு போலீசார் அதிரடி சோதனை நடத்தினர். தமிழ்நாடு அரசால் இரவு 10 மணிக்கு மதுக்கடைகள் மூடப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து பெரியநாயக்கன்பாளையம், சாமி செட்டிபாளையம், கேஸ் கம்பெனி, கூடலூர் கவுண்டம்பாளையம் உட்பட்டது அனைத்து பகுதிகளிலும் அரசால் நடத்தப்படும் 14 மதுக்கடைகள் இரவு 10 மணிக்கு மூடப்படுகிறதா எனபோலீசார் அதிரடி சோதனை நடத்தினர்.

2 சிறுத்தைகளுக்கு இடையே மோதலில் பெண் சிறுத்தை உயிரிழப்பு

ஊட்டி, மே 19: நீலகிரி வன கோட்டம், ஊட்டி வடக்கு வனச்சரகம், தேனாடு கம்பை அருகே ஜே.கொலக்கொம்பை கிராமத்திற்கு அருகேயுள்ள தேயிலை தோட்டத்தில் சிறுத்தை ஒன்று இறந்து கிடப்பதாக பொதுமக்கள் வனத்துறையினருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். இத்தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற வனத்துறையினர் இறந்து கிடந்த சிறுத்தையை பார்வையிட்டனர். இதில் இறந்தது 4 வயது மதிக்கத்தக்க பெண் சிறுத்தை என தெரியவந்தது. ஊட்டி மற்றும் ஜெகதளா கால்நடை மருத்துவர்கள் வரவழைக்கப்பட்டு தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் வழிகாட்டுதல்களை பின்பற்றி வழிகாட்டுதலின் படி, பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. ஆய்விற்காக உடல் பாகங்கள் சேகரிக்கப்பட்டன. முதற்கட்ட ஆய்வில் இரு சிறுத்தைகளுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் படுகாயமடைந்து இறந்திருக்க வாய்ப்புள்ளது. இருப்பினும் பிரேத பரிசோதனை அறிக்கைக்கு பின்னரே இறப்பிற்கான முழுமையான காரணம் தெரியவரும் என வனத்துறையினர் தெரிவித்தனர்.

சிறுமுகை அருகே

தாயை பிரிந்த குட்டி யானை குறித்து தகவல் கூற மறுக்கும் வனத்துறை

வலுக்கும் சந்தேகம்

மேட்டுப்பாளையம், மே19: சிறுமுகை அருகே தாயை பிரிந்த குட்டி யானை குறித்து தகவல் கூற வனத்துறை மறுப்பதால் பொதுமக்களுக்கும், வன ஆர்வலர்களுக்கும் சந்தேகம் வலுக்கும் சூழல் நிலவி வருகிறது.

மேட்டுப்பாளையத்தை அடுத்துள்ள சிறுமுகை லிங்காபுரம் பகுதியில் கடந்த 23 தினங்களுக்கு முன்னர் தாயை பிரிந்த சுமார் 3 முதல் 4 மாதமுள்ள ஆண் குட்டி யானை ஒன்று அவ்வழியே வருவோர் போவோரிடம் தாயுடன் சேர்த்து வைக்கக்கோரி உதவி கேட்டது நெகிழ்வை ஏற்படுத்தியது. இதுகுறித்து அறிந்த சிறுமுகை வனச்சரகர் மனோஜ் குமார் தலைமையிலான வனத்துறையினர் மாவட்ட வன அலுவலர் வெங்கடேஷ் பிரபு அறிவுறுத்தலின் பேரில் வனத்துறையில் இரு குழுக்களை ஏற்படுத்தி குட்டி யானையை அதன் தாயுடன் சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

▶ தாயை பிரிந்த நிலையில் தவித்து வரும் குட்டி யானை (பைல் படம்).

தொடர்ந்து 7 நாட்களாக குட்டி யானையை வனப்பகுதியில் விட்டு வனத்துறையினர் கண்காணித்து வந்தனர். சிறுமுகை வனச்சரக பகுதிகளில் உள்ள பல்வேறு யானை கூட்டங்களுக்கு அருகில் யானை சென்றும் அதனை அந்த கூட்டங்கள் ஏற்க மறுத்து விட்டன. அதிநவீன தெர்மல் ட்ரோன் கேமரா மூலமும் குட்டி யானையை தொடர்ந்து கண்காணித்து வந்தனர்.

எனினும், 7 நாட்களை கடந்த பின்னர் எந்த கூட்டமும் குட்டி யானையை ஏற்கவில்லை. இரண்டு மற்றும் மூன்று குட்டிகளை கொண்ட கூட்டத்துடன் சேர்க்க முயற்சித்தாலும் குட்டி யானையை அந்த யானை கூட்டங்கள் சேர்க்க மறுத்து விட்டன.

எனவே, குட்டி யானையின் உடல் நிலையை கருத்தில் கொண்டு அதனை சிறுமுகை பெத்திக்குட்டை மோதூர் வனப்பகுதியில் புதியதாக திறக்கப்பட்ட வனவிலங்கு மீட்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையத்திற்கு வனத்துறை வாகனம் மூலம் கொண்டு சென்று பராமரித்து வருகின்றனர். தற்போது குட்டி யானை பூரண உடல் நலத்துடன், சுறுசுறுப்பாக உள்ளதாக வனத்துறையினர் தகவல் தெரிவித்த நிலையில் இதுவரை குட்டி யானையின் புகைப்படத்தையோ அல்லது வீடியோவையோ காட்ட வனத்துறையினர் மறுத்து வருகின்றனர்.

இதுகுறித்து வன ஆர்வலர்கள் கூறுகையில், ‘‘23 நாட்களை கடந்த பின்னரும் தாயை பிரிந்த குட்டி யானையை வனவிலங்கு மீட்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையத்திற்கு கொண்டு சென்று தொடர்ந்து வனத்துறையினர் பராமரித்து வருவதாக தெரிவித்து வருகின்றனர்.

ஆனால், இது வரை குட்டி யானை பூரண உடல் நலத்துடன் உள்ளதா? என்பதை வனத்துறையினர் காட்ட மறுப்பது வன ஆர்வலர்களிடையே சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. வனத்துறையினர் உடனடியாக குட்டி யானையின் தற்போதைய புகைப்படத்தையோ அல்லது வீடியோவையோ வெளியிட வேண்டும்’’ என தெரிவித்துள்ளனர்.

யானை நிலை குறித்து தெரிவிக்க மறுப்பு

தாயை பிரிந்த குட்டி யானையை அதன் தாயுடன் சேர்க்கும் வனத்துறையினரின் முயற்சி தோல்வி அடைந்துள்ளது. தற்போது அந்த குட்டி யானை வனவிலங்கு மீட்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையத்தில் வைத்து மையத்தின் வன கால்நடை மருத்துவர் விஜயராகவன் தலைமையில் மருத்துவ குழுவினர் சிகிச்சை மற்றும் உடல் பரிசோதனை மேற்கொண்டு வருவதாக வனத்துறையினர் தெரிவித்து வருகின்றனர். ஆனால், இதுவரை வனத்துறை சார்பில் குட்டி யானை உடல்நலத்துடன் உள்ளதா? என்பதை வனத்துறையினர் போட்டோவாகவோ, வீடியோவாகவோ வெளியிட மறுக்கின்றனர். மேலும், செய்தியாளர்கள் யானையை புகைப்படம் எடுக்க சென்றாலும் அவர்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது. இதனால் குட்டி யானையின் உடல் நலம் குறித்த சந்தேகம் வலுத்து வருகிறது. இது குறித்து தகவல் அறிய மாவட்ட வன அலுவலர் வெங்கட் பிரபுவுக்கு பலமுறை அழைத்தும் அவர் அழைப்புகளை எடுப்பதில்லை.

மாந்தோப்புக்குள் புகுந்து அட்டகாசம்

மாங்காய்களை ருசி பார்த்த காட்டு யானைகள்

மேட்டுப்பாளையம், மே19: மேட்டுப்பாளையம் சுற்றுவட்டார பகுதியான தேக்கம்பட்டி, தாசம்பாளையம், சமயபுரம், நெல்லித்துறை, ஓடந்துறை, ஊமப்பாளையம், பாலப்பட்டி, வச்சினம்பாளையம், சிறுமுகை, லிங்கபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கடந்த சில ஆண்டுகளாகவே வனவிலங்குகள் விளைநிலங்களில் புகுந்து பயிர்களை தொடர்ந்து சேதம் செய்து வருகிறது.

நேற்று முன்தினம் இரவு மேட்டுப்பாளையம் அடுத்துள்ள நரிப்பள்ளம் ரோடு வினோபாஜி நகர் பகுதியில் வனப்பகுதியில் இருந்து வெளியேறிய 2 காட்டு யானைகள் அங்கிருந்த தனியார் தோட்டத்திற்குள் புகுந்தன. அங்கிருந்த மாமரத்தில் மாங்காய்களை பறித்து உண்ண துவங்கின.



▶ மாமரத்தில் மாங்காய்களை ருசி பார்த்த காட்டு யானைகள்.

தோட்டத்தில் வசித்த ஊழியர்கள் இதுகுறித்து வனத்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். விரைந்து சென்ற வனத்துறையினர் நீண்ட நேரம் போராடி இரு காட்டு யானைகளையும் அடர்ந்த வனப்பகுதிக்குள் விரட்டி அடித்தனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், “கடந்த சில ஆண்டுகளாகவே பாகுபலி யானை தொடர்ந்து விவசாய நிலத்திற்கு புகுந்து பயிர்களை சேதம் விளைவித்து வருகிறது. இதனால் இரவு நேர காவல் பணிக்கு கூட எவரும் பணிக்கு வருவதற்கு தயங்கி வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது மேலும் ஒரு யானை கூட்டு சேர்ந்து பாகுபலி உலா வருவதால் எந்த நேரம் என்ன ஆகுமோ? என அச்சத்தில் வாழ்கிறோம்” என வேதனையுடன் தெரிவித்தனர்.

பொள்ளாச்சியில்

சுரங்கப்பாதையை திறக்கும்படி சப்-கலெக்டரிடம் கோரிக்கை

பொள்ளாச்சி, மே 19: பொள்ளாச்சி சப் - கலெக்டர் அலுவலகத்தில் நேற்று மக்கள் குறைதீர் முகாம் நடைபெற்றது.

இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், புதிய ரேஷன் கார்டு, ஆக்கிரமிப்பு அகற்றம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கையை வலியுறுத்தி 25க்கும் மேற்பட்டோர் மனு அளித்தனர். இதில், கோவை தெற்கு மாவட்ட இந்து முன்னணி சார்பில் அளிக்கப்பட்ட மனுவில், பொள்ளாச்சி புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பழைய பேருந்து நிலையத்துக்கு செல்லும் சுரங்கபாதை கடந்த ஓராண்டுக்கு மேலாக பூட்டி வைக்கப்பட்டுள்ளது. இதனால் காலையிலும், மாலையிலும் பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் மாணவர்கள், பொதுமக்களும் சாலையை கடந்து செல்கின்றனர். அவ்வாறு செல்லும்போது அடிக்கடி போக்குவரத்து பாதிப்பு உண்டாகிறது. எனவே, சுரங்கப்பாதையை திறந்து உரிய பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

▶ பொள்ளாச்சியில் இரு பேருந்து நிலையத்திற்கு இடையே உள்ள சுரங்கப்பாதையை திறக்க வேண்டும் என, சப்-கலெக்டர் அலுவலகத்தில் பொது மக்கள் கோரிக்கை மனு அளிக்க வந்தனர்.

ரூ.20 கோடியில் அடியோடு மாறும் மேட்டுப்பாளையம் ரயில் நிலையம்

பணிகளை ஆகஸ்ட் மாதம் முடிக்க இலக்கு

கோவை, மே 19: மேட்டுப்பாளையம் ரயில் நிலையம் புனரமைப்பு பணி ரூ.20 கோடியில் நடந்து வருகிறது. இப்பணியை வரும் ஆகஸ்ட் மாதத்திற்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் ரயில் நிலையம் 150 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் மேட்டுப்பாளையம் ரயில் நிலையம் கட்டப்பட்டது. மேட்டுப்பாளையத்தில் இருந்துதான் நீலகிரி மாவட்டம் ஊட்டிக்கு மலை ரயில் இயக்கப்படுகிறது. அதேபோல், சென்னைக்கும், சென்னையில் இருந்து மேட்டுப்பாளையத்திற்கும் நீலகிரி எக்ஸ்பிரஸ் ரயில் இயக்கப்படுகிறது.

மேட்டுப்பாளையத்தில் இருந்து போத்தனூருக்கும், போத்தனூரில் இருந்து மேட்டுப்பாளையத்திற்கும் தினசரி பயணிகள் ரயில்கள் இயக்கப்பட்டு வருகிறது. மேலும், மேட்டுப்பாளையத்தில் இருந்து ஊட்டிக்கும், ஊட்டியில் இருந்து மேட்டுப்பாளையத்திற்கும் தினசரி மலை ரயில் இயக்கப்படுகிறது. இதுதவிர, வாராந்திர சிறப்பு ரயில்களும் இயக்கப்படுகிறது.

இந்த நிலையில், தென் மாவட்டங்கள் மற்றும் கேரளா மாநிலத்தின் பிற பகுதிகளுக்கு புதிய ரயில்களை இயக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர். மேட்டுப்பாளையத்தை பொறுத்தரை ஊட்டி, கோத்தகிரி, குன்னூர் என மலைவாசல் தலங்களுக்கு செல்ல முக்கியமான வழித்தடம் ஆகும். கோவை மாவட்டத்தின் மிக முக்கியமான சுற்றுலா மற்றும் வர்த்தக மையமாகவும் மேட்டுப்பாளையம் திகழ்கிறது.

மேட்டுப்பாளையத்திற்கு பல்வேறு மாநிலங்களில் இருந்து சுற்றுலா பயணிகள் வந்து, செல்கின்றனர். எனவே, பயணிகளின் நீண்ட கால கோரிக்கையை ஏற்று, உள்கட்டமைப்பு பணிகளை துரிதப்படுத்தி, ரயில்களை இயக்க ரயில்வே நிர்வாகம் முடிவு செய்தது. அதன்படி மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தில் யார்டு விரிவாக்க திட்டத்தின் கீழ் ரூ.20 கோடி மதிப்பில் மேம்பாட்டு பணிகள் தொடங்கி, நடைபெற்று வருகிறது.

ரயில் நிலைய அதிகாரியின் புதிய கேபின் அறை பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. மீட்டர் கேஜ் பகுதியில் லோகோ இன்ஜினை நிறுத்த லோகோ ஷெட் அமைக்கும் பணி தீவிரமாக நடக்கிறது. புதிய தண்டவாளம் அமைக்கும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. அதேபோல், கூடுதலாக இயக்கப்படும் புதிய ரயில்களுக்கு மின் இணைப்பு கொடுக்கும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. மீட்டர் கேஜ் பகுதியில் புதிய நடைமேடை அமைக்கும் பணியும் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. இப்பணிகளை வருகிற ஆகஸ்டு மாதத்திற்குள் செய்து முடிக்க ரயில்வே துறை அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர். இப்பணிகள் அனைத்தும் நிறைவடைந்த பின்னர், மேட்டுப்பாளையத்தில் இருந்து மற்ற முக்கிய பகுதிகளுக்கு புதிய ரயில்கள் இயக்கப்பட உள்ளன.

அதன்படி, மேட்டுப்பாளையம் - ராமேஸ்வரம் புதிய ரயில், போத்தனூர், பொள்ளாச்சி வழியாக தினசரி இயக்கப்படும். சென்னை - கோவை இடையே இயக்கப்படும் வந்தே பாரத் (20643/44) அதிவிரைவு ரயில், இனி மேட்டுப்பாளையம் வரை நீட்டிக்கப்படும்.

கோவையில் இருந்து மங்களூர் செல்லும் தினசரி ரயில் (22609/10), கோவையில் இருந்து கண்ணூர் செல்லும் தினசரி ரயில் (16607/08), கோவையில் இருந்து மங்களூர் செல்லும் மற்றொரு ரயில் (16323/24). கோவை - மதுரை (16721/22) தினசரி ரயில் ஆகியவை இனி மேட்டுப்பாளையத்தில் இதுந்து புறப்படும் எனவும் ரயில்வே துறை அதிகாரிகள் கூறினர்.

மேற்கு பைபாஸ் ரோட்டின் தரம் ஆய்வு

கோவை, மே 19: கோவை மேற்கு பைபாஸ் ரோடு மதுக்கரை மைல்கல் முதல் மாதம்பட்டி வரை 11.8 கி.மீ தூரத்திற்கு அமைக்கப்பட்டது. 4 வழிப்பாதையாக 17.50 மீட்டர் அகலத்தில் இந்த பைபாஸ் ரோடு போடப்பட்டது. 250 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட இந்த ரோடு கடந்த பிப்ரவரி மாதம் 25ம் தேதி திறக்கப்பட்டது. நகரில் கடும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும், பாலக்காடு ரோட்டில் போக்குவரத்து நெரிசல் 50 முதல் 60 சதவீதம் குறையும் என தெரிவிக்கப்பட்டது. மைல்கல் பகுதியில் 30 கோடி ரூபாய் செலவில் மேம்பாலம் கட்டப்பட்டு வருகிறது. இந்த நிலையில், நெடுஞ்சாலை சிறப்பு திட்டங்கள் கண்காணிப்பு பொறியாளர் ஜெயலட்சுமி, கோட்ட பொறியாளர் சமுத்திரக்கனி உள்ளிட்டோர் ஆய்வு செய்தனர். இதில் ரோட்டின் தாக்கு திறன், புல அளவீடு சரியாக இருக்கிறதா என ஆய்வு செய்யப்பட்டது. ரோட்டில் கோர் கட்டிங் என்ற வகையில் சோதனை நடத்தப்பட்டது. இதில் ரோடு தரமாக உறுதியாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

அழுகிய நிலையில் புலியின் உடல் கண்டெடுப்பு

கூடலூர், மே19: முதுமலை புலிகள் காப்பகம் மசினகுடி வனச்சரகத்திற்குட்பட்ட மாயார் காப்பு காடு, மார்கன் பெட்டா வனப்பகுதியில் உள்ள மாயார் ஆற்றங்கரையோரம் பாம்பாக்ஸ் பகுதியில் வன பணியாளர்கள் வழக்கம்போல ரோந்து பணியில் இருந்தனர். அப்போது புலி ஒன்று இறந்து பல நாட்கள் ஆன நிலையில் அழுகிய நிலையில் அதன் உடல் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து பணியாளர்கள் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர். பின்னர் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்த வனத்துறை அதிகாரிகள் இறந்து கிடப்பது புலி என்பதை உறுதி செய்து, தெப்பக்காடு வன கால்நடை மருத்துவர் ராஜேஷ்குமார் தலைமையிலான மருத்துவ குழுவினர் உடற்கூராய்வு செய்தனர். தொடர்ந்து ஆய்வக முடிவுக்கு பின் புலியின் வயது மற்றும் இனம் ஆகியவை தெரியவரும் என வனத்துறையினர் தெரிவித்தனர்.

▶ மாயார் வனப்பகுதியில் இறந்து மக்கி காணப்படும் புலியின் உடல்.

க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா–411014.

பிற்சேர்க்கை IV(விதி 8 (1) ஐ காண்க) சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்கான)

இவ்வாறிருக்க, கீழே கையொப்பமிட்டவர் **க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**, இதற்குப் பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும் மேலே குறிப்பிடப்பட்ட கார்ப்பரேட்/ பதிவு அலுவலகத்தின் அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (இதன் பின் ‘‘கூறப்பட்ட சட்டம்’’ என்று குறிப்பிடப்படும்) கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 3 உடன் சட்டத்தின் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் ஒரு கோரிக்கை அறிவிப்பு வழங்கி கீழ்குறிப்பிட்ட கடன்தாரர்களை அறிவிப்பில் குறிப்பிட்ட தொகையை மேற்கூறிய அறிவிப்பு கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பி செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர்கள் தொகையை திருப்பி செலுத்தத் தவறியுள்ளார். கீழே கையொப்பமிட்டவர் கடன்தாரருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிப்பினை வழங்கி, கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 சொல்லப்பட்ட விதிகளில் விதி 8 உடன் பிரிவு 13(4) கீழ் அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்தினை கீழே குறிப்பிட்டுள்ள தேதியில் சுவனாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரர் மேற்கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 13 மற்றும் துணைப் பிரிவு (8) இல் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்துகளை மீட்பதற்காகத் தரப்பட்டுள்ள கால அவகாசத்தைத் தெரிந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சுவாதீனம் செய்யப்பட்டுள்ள சொத்துகளின் விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ. எண்	கடன்தாரர்(கள்) பெயர்	சொத்து விவரங்கள்:	சுவாதீன செய்த நாள்	சட்டப்படி கோரிக்கை அறிவிப்பு வழங்கிய நாள்	கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை (ரூ.)
2	அருண்ரான் ஆறுமுகம், ஹரிப்ரியா பி	கோயம்புத்தூர் தெற்கு பதிவு மாவட்டத்தில், பொள்ளாச்சி துணை பதிவு மாவட்டம், ஆனைமலை தாலுகா, அம்பராம்பாளையம் கிராமம், கெட்டிமேலன்புதூர் நத்தம் பழைய S.F.No.25 இல் ஊக்காட்டு, பட்டா எண்.234 இன்படி, புதிய S.F. No.197/4 95 சதுர மீட்டர் பரப்பளவு, (1023 சதுர அடி) பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளது: வடக்கில் – கண்ணன் சொத்து (புதிய S.F. No.195), தெற்கில் – புதிய S.F. No.197/5, கிழக்கில் – புதிய S.F. No.197/10, 197/13, மேற்கில்– பொது பாதை (புதிய S.F. No.197/3). அளவீடுகள்: வடக்கு–தெற்காக கிழக்குப் பக்கத்தில் – 14 மீட்டர், வடக்கு–தெற்காக மேற்குப் பக்கத்தில்– 14.8 மீட்டர், கிழக்கு–மேற்காக வடக்குப் பக்கம் – 5 மீட்டர், கிழக்கு–மேற்காக தெற்குப் பக்கம் – 8 மீட்டர், பாதை, வண்டிப் பாதை மற்றும் பிற அனைத்து உபகரணங்களையும் பயன்படுத்தும் உரிமை இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த சொத்து பட்டா எண்.234, புதிய S.F.No.197/4 இன்படி அம்பராம்பாளையம் கிராம பஞ்சாயத்தின் எல்லைக்குள் உள்ளது.	15/05/2026	09/03/2026	**கடன் எண்:** LAP06102000000005055236 இன்படி ரூ.5,99,578/– (ரூபாய் ஐந்து லட்சத்து தொன்னூற்று ஒன்பதாயிரத்து ஐந்நூற்று எழுபத்தெட்டு மட்டும்) அதனுடன் கூட பணம் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான ஆண்டொன்றுக்கு 15.35% வட்டி. **கடன் எண்:** HL00610200000005053666 இன்படி ரூ.9,73,524/– (ரூபாய் ஒன்பது லட்சத்து எழுபத்து மூன்று ஆயிரத்து ஐந்நூற்று இருபத்து நான்கு மட்டும்) அதனுடன் கூட பணம் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான ஆண்டொன்றுக்கு 14.35% வட்டி.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்திதாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

இடம்: தமிழ்நாடு, நாள்: 19.05.2026

ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி, க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா–411014. கிளை அலுவலகம் அலகு: கல்யாணி டவர், எண்.21ஏ/சி, கழுர்கான் தெரு, உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம், தமிழ்நாடு–642126.

மின்–ஏலம்– விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உ–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது.

கடனீட்டு சொத்துகள் **அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில்** மின்–ஏலம் மூலமாக **19.06.2026** தேதியன்று விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும்.

விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு நாள் நிலுவைத் தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையில் 10%) (F)	முன்வைப்புத் தொகை சமர்ப்பிக்கும் தேதி(G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்து பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏல தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள்/ நிதிசார்ந வழக்குகள் ஏதேனும் இருந்தால் (K)
2	**கடன் எண்:** LAP06102000000005062740 **சிவசக்தி பழனிசாமி (கடன்தாரர்), ராணி சிவசக்தி (உ கடன்தாரர்)**	**கோரிக்கை அறிவிப்பு நாள் 11.02.2026 நிலுவைத் தொகை ரூ.11.02.2026 தேதியின்படி ரூ.6,70,248 /–** (ரூபாய் ஆறு லட்சத்து எழுபதாயிரத்து இருநூற்று நாற்பத்தெட்டு மட்டும்) மற்றும் திருப்பிச் செலுத்தும் வரை @ ஆண்டுக்கு 18.35% கூடுதல் வட்டியுடன்.	**கையக**	திருப்பூர் பதிவு மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி, துணைப் பதிவு தாலுகா. உருக்கட்டி கிராமம். **எல்லைகள்:** வடக்கில்: தெற்கு சாலை, கிழக்கில்: பழனிச்சாமி வீடு, தெற்கில்: கீழ்மேல் தெரு, மேற்கில்: கன்னிச்சாமிவீடு, இதனிடையே அளவீடு: , வடக்குப் பக்கத்தில்: 11.8 மீட்டர் நீளம், தெற்கு பக்கத்தில்: 12.6 மீட்டர், தெற்குப் பக்கத்தில், 5.8 மீட்டர் நீளம், தெற்குப் பக்கத்தில் 6.8 மீட்டர் நீளம், 77 சதுர மீட்டர் பரப்பளவில் A2–சென்ட் நிலம் உள்ளது. இந்த மனை நிலத்துக்கு வழக்கப்படி உ